# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 109/மா/2025
நாள் 01.04.2026

S. பிரேம்குமார்
சென்னை –600 057 --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம் 4,
பெரு நகர சென்னை மாநகராட்சி.

(2) K. குமார், கட்டிட உரிமையாளர்,
சென்னை–600 021. --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 057, எண்ணூர், காசி விஸ்வநாதர் கோவில் குப்பம், ஐந்தாவது தெரு, கதவு எண் 1/NA என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.பிரேம்குமார் என்பவரின் 17.01.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.01.2025 அன்று பெறப்பட்டு 109/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 057, எண்ணூர், காசி விஸ்வநாதர் கோவில் குப்பம், ஐந்தாவது தெரு, கதவு எண் 1/NA என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.பிரேம்குமார் என்பவர் 17.01.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"(1) நான் சென்னை மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களில் வழக்கறிஞராகவும் மற்றும் சமுதாயத்தில் சமூக சேவகராகவும் பணியாற்றி வருகிறேன். சென்னை பெருநகர மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் வரும் பகுதிகளில் குடியிருப்பு / வணிக வளாக கட்டிடம் கட்டுவதற்கு மாநகராட்சி அல்லது CMDA விடம் உரிய அனுமதி பெற்று தொகை செலுத்தி கட்டுமானம் நடைபெறுவதே சட்டப்படி சரியானதாகும். இதன்படி கிடைக்கும் தொகையின் வழியாக அரசின் மூலம் மக்கள் நலப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனினும் சில நபர்கள் உரிய அனுமதி பெறாமலும் அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தாமலும் கட்டிடங்கள் கட்டி சென்னை மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தி வருகின்றனர். இதை சரிகட்ட சென்னை பெருநகர மாநகராட்சி அடிக்கடி சொத்துவரி, தொழில் வரி போன்றவற்றை உயர்த்தி வருகின்றன. இதனால் நான் உட்பட அனைத்து தரப்பு மக்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றன.

(2) இந்நிலையில், சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்தின் கீழ் வரும் மண்டலம்–4, வார்டு 41–க்கு உட்பட்ட பகுதியான கொருக்குப்பேட்டை, அஜீஸ்நகர், அம்மன் கோவில் தெரு, கதவு எண் 01/79, என்ற விலாசத்தில் திரு. குமார் என்பவரால் கடந்த 2022 ஆண்டு மூன்று மாடி வணிக/குடியிருப்பு கட்டிடம் அனுமதியற்று விதிகளை மீறி கட்டப்பட்டு

தற்போது பயன்பாட்டில் உள்ளது. இந்த அனுமதியற்ற கட்டிடத்தின் மீது நடவடிக்கைகள் எடுக்க வேண்டி கடந்த 2023 ஆண்டு முதல் தற்போது வரை மேற்கண்ட சென்னை மாநகராட்சி மண்டலம்–4 அலுவலகத்திற்கு நான் நேரிலும், தபாலிலும், இணையம் வழியாகவும் பலமுறை எழுத்துப்பூர்வமான புகாரினை அளித்திருந்தேன். அதற்கு கொடுக்கப்பட்ட புகாருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது, நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் மட்டும் அளிக்கப்பட்டது, எனினும் சட்டப்படியான நடவடிக்கைகள் தற்போதுவரை எடுக்கவில்லை. மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடங்களின் உரிமையாளர் உள்ளூர் செல்வாக்கு மிக்கவர்கள் என்பதால், சென்னை மாநகராட்சி மண்டலம்–04–ன் அலுவலர்கள் அனுமதியற்ற / விதிமீறல் கட்டிடத்தின் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள் என தெரிய வருகிறது.

(3) மேற்கண்ட அனுமதியற்ற/விதிமீறல் கட்டிடத்தினால் சென்னை பெருநகர மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவது ஒருபுறமென்றாலும் கட்டடத்தின் தரம் குறைவு, அதை பயன்படுத்தும் பொது மக்களின் பாதுகாப்பு, நகர்புற வளர்ச்சிக்காக சாலை விரிவாக்கம், நகர்புற மேம்பாட்டு கட்டணம் வசூலித்தல் போன்ற விசயங்களை செயல்படுத்த முடியாமல் போகிறது, விதியை மீறி கட்டும் கட்டடங்களால் நகர்புற வளர்ச்சி என்பது பகல் கனவாகிறது. மேலும் மாண்புமிகு, சென்னை உயர்நீதிமன்றம் W.P.NO.16555/2014 உத்தரவின்படி அனுமதியற்ற/விதிமீறல் கட்டிடங்கள் மீது சென்னை பெருநகர மாநகராட்சி (GCC) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்துடன் (CMDA) இணைந்து சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று, நீதிமன்ற உத்தரவும் மேற்கண்ட மண்டலம் 4–ன், அலுவலர்கள் செயல் படுத்தவில்லை.

(4) எனவே, மேற்கண்ட காரணங்கள் அடிப்படையில் பொது நலனுடன் தாக்கல் செய்யப்பட்ட இந்த புகாரினை விசாரணை செய்து மேற்கண்ட அனுமதியற்ற/விதிமீறல் கட்டிடத்தின் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்க சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டுமென்று இம்முறைமன்றத்தை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

2) இந்நிலையில், மனுதாரர் 17.03.2025 நாளிட்ட தனது கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:–

அ) ''மண்டலம்–04, வார்டு–41, சென்னை–600 081, கொருக்குப்பேட்டை, அஜிஸ் நகர், அம்மன் கோவில் தெரு, கதவு எண் 01/79 என்ற விலாசத்தில் சென்னை மாநகராட்சியிடம் உரிய அனுமதியில்லாமல் கட்டப்பட்டது என நான் புகார் அளித்திருந்தேன். இதனை விசாரணை செய்து சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்–04 அலுவலர்கள் உரிய நடவடிக்கைகள் எடுத்துள்ளனர். மேற்கண்ட கட்டிடத்தின் உரிமையாளரும் சட்டப்படி அவரின் கட்டிடத்திற்கு உரிய அனுமதியை பெற அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து வருகிறார் என தெரிய வருகிறது. இந்த தகவல்கள் சென்னை மாநகராட்சியின் அதிகாரிகள் வழியாக அறிந்து கொண்டேன். ஆதலால் இனி மேற்படி புகாருக்கு எந்த முகாந்திரமும் இல்லை என தெரிய வருகிறது.

ஆ) எனவே, எனது புகார் மனுவின் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதால் எனக்கு முழு திருப்தி ஏற்பட்டு அதிகாரிகளுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இது தொடர்பாக கடந்த 17.01.2025 அன்று நான் தபால் மூலம் அனுப்பிய எனது புகார் மனுவினை திரும்ப பெற்றுக் கொள்ள அனுமதியளித்து எனது புகாரின் மீது எந்த நடவடிக்கைகளுக்கும் எடுக்க வேண்டாம் என்று தங்களிடம் நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

3) மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 08.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. மேலும், 08.10.2025 நாளிட்ட நினைவூட்டு கடிதம் அனுப்பியும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் மண்டல அலுவலரிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

4) எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 13.03.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் 13.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

6) முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் மண்டல அலுவலர் சார்பாக உதவிப் பொறியாளர் 13.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

> "மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டு விதி மீறல் கண்டறியப்பட்டதால், 10.05.2024 அன்று தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57ன் கீழ் தாக்கீது வீட்டு உரிமையாளருக்கு வழங்கப்பட்டது. மேலும் மேற்கண்ட வீட்டின் உரிமையாளருக்கு கட்டிட பணியை நிறுத்தக் கோரி 02.09.2024 அன்று தாக்கீது வழங்கப்பட்டது. மேலும் Notice for Production of documents 11.03.2026 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.
>
> மேற்கண்ட விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மேலே குறிப்பிட்டுள்ள தாக்கீதுகளின் நகல் இத்துடன் சமர்ப்பிக்கிறேன்."

7) இரண்டாம் எதிர்மனுதாரரான கட்டிட உரிமையாளர் திரு. K. குமார் மற்றும் அவரது மகன் K. லோகேஷ் ஆகியோர் 13.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

> "சென்னை–81, தண்டையார்பேட்டை, அஜீஸ் நகர், அம்மன் கோவில் தெரு, கதவு எண்.79ல் அமைந்துள்ள வீட்டின் இடமானது எங்களின் முன்னோர்களின் வழியாக எங்களுக்கு கிடைத்த சொத்தாகும். இருப்பினும் எங்கள் வீட்டிற்கு சொத்து வரி, தண்ணீர் வரி, மற்றும் மின் கட்டணம் ஆகியவை முறையாக செலுத்தி வருகிறோம்.
>
> மேலும் மேற்கண்ட இடத்தில் எங்கள் முன்னோர்கள் முதற்கொண்டு பலதலைமுறைகளாக வாழ்ந்து வருகிறோம். ஆனால் இவ்விடத்திற்குரிய சொத்து பத்திரம் ஏதும் எங்களிடம் இல்லை. எங்களை போலவே அங்கு சுமார் 500 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள்.
>
> மனுதாரர் பணம் பறிக்கும் நோக்கில் மனுவினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார். ஏற்கனவே எங்களை தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு மிரட்டியதால், முதல் தவணையாக ரூ.10,000/– பணமாகவும், ரூ.5000/– G Pay மூலம் திரு.சசிகுமார் அவர்களுக்கு 08.03.2025 அன்று வழங்கப்பட்டது. மேலும் தற்போது வரை பணம் கேட்டு மிரட்டி வருகிறார். இது குறித்து 12.03.2026 அன்று H6 தண்டையார் பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளோம். அதற்கான ரசீது இன்னும் பெறப்படவில்லை.

மேலும் வீட்டு வரி, தண்ணீர் வரி, மின் கட்டணம் செலுத்தியற்கான ரசீதுகளின் நகல்களையும் மற்றும் G Pay மூலம் பணம் அனுப்பியதற்கான நகல் மனுதாரர் சார்பாக எங்களை மிரட்டியதற்கான வீடியோவின் Pen Drive ஆகியவற்றை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

மேற்கண்ட வாக்குமூலம் எங்கள் முன்னிலையில் படித்து காட்டப்பட்டு சரியாக உள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறோம்.''

8) மனுதாரரின் மனு, கடிதம், முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரணைக்கு ஆஜரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான கட்டிட உரிமையாளர் திரு. K. குமார் மற்றும் அவரது மகன் K. லோகேஷ் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண் 41–ல் கொருக்குப்பேட்டை, அஜீஸ்நகர், அம்மன் கோவில் தெரு, கதவு எண் 01/79, என்ற விலாசத்தில் திரு. குமார் என்பவரால் கடந்த 2022 ஆண்டு மூன்று மாடி வணிக/குடியிருப்பு கட்டிடம் அனுமதியற்று விதிகளை மீறி கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ள கட்டிடம் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மனுக்கள் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால், உரிய உத்தரவுகள் பிறப்பிக்குமாறு கோரியிருப்பதும், ஆனால் மனுதாரர் தன்னுடைய 17.03.2025 நாளிட்ட கடிதத்தில் தான் அளித்த புகார் மீது சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்–04 அலுவலர்கள் விசாரணை செய்து உரிய நடவடிக்கைகள் எடுத்துள்ளதன் அடிப்படையில், மேற்கண்ட கட்டிடத்தின் உரிமையாளர் சட்டப்படி அவரின் கட்டிடத்திற்கு உரிய அனுமதியை பெற அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து வருவதை பெருநகர சென்னை மாநராட்சி மண்டலம்–4–ன் மூலம் அறிந்து கொண்டதால் இனி மேற்படி புகாருக்கு எந்த முகாந்திரமும் இல்லை என தெரிய வருகிறது என்பதும், எனவே, தனது புகார் மனுவின் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதால் தனக்கு முழு திருப்தி ஏற்பட்டு அதிகாரிகளுக்கு தனது நன்றியை தெரிவித்து, மேற்கண்ட புகார் தொடர்பாக கடந்த 17.01.2025 அன்று தான் அளித்த புகார் மனுவினை திரும்ப பெற்றுக் கொள்ள அனுமதியளித்து தனது புகாரின் மீது எந்த நடவடிக்கைகளும் எடுக்க வேண்டாம் என தெரிவித்திருப்பதும் மனுதாரரின் மனு மற்றும் கடிதம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டு விதி மீறல் கண்டறியப்பட்டதால், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57ன் கீழ் தாக்கீது வீட்டு உரிமையாளருக்கு வழங்கப்பட்டது என்பதும், மேற்கண்ட வீட்டின் உரிமையாளருக்கு கட்டிட பணியை நிறுத்தக் கோரி தாக்கீது வழங்கப்பட்டது என்பதும், Notice for Production of documents தாக்கீதும் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்பதும், மேற்கண்ட விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மூலம் அறிய முடிகிறது.

சென்னை–81, தண்டையார்பேட்டை., அஜீஸ் நகர், அம்மன் கோவில் தெரு, கதவு எண்.79ல் அமைந்துள்ள வீட்டின் இடமானது தங்களின் முன்னோர்களின் வழியாக கிடைத்த சொத்தில் கட்டப்பட்ட தங்கள் வீட்டிற்கு சொத்து வரி, தண்ணீர் வரி, மற்றும் மின் கட்டணம் ஆகியவை முறையாக செலுத்தப்பட்டுள்ளது என்பதும், ஆனால் இவ்விடத்திற்குரிய சொத்து பத்திரம் ஏதும் தங்களிடம் இல்லை என்பதும், தங்களைப்

போலவே அங்கு சுமார் 500 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள் என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் தன்னுடைய புகாரில் குறிப்பிட்டுள்ள சென்னை–81, தண்டையார்பேட்டை, அஜீஸ் நகர், அம்மன் கோவில் தெரு, கதவு எண்.79ல் பெருநகர சென்னை மாநகராட்சியிடமிருந்து கட்டிட திட்ட அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தினை கள ஆய்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57ன் கீழ் வீட்டு உரிமையாளருக்கு தாக்கீதுகள் வழங்கப்பட்டு, மேற்கண்ட விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதன்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தக்க அறிவுரைகளை மண்டலம் 4 பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு வழங்க பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. S. பிரேம்குமார்,
கதவு எண் 1/NA, ஐந்தாவது தெரு,
காசி விஸ்வநாதர் கோவில் குப்பம், எண்ணூர்,
சென்னை–600 057.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003

(3) மண்டல அலுவலர், மண்டலம் 4,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண்266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை 600 021.

(4) திரு. குமார். K.,கட்டிட உரிமையாளர்,
கதவு எண் 1/79, அம்மன் கோயில் தெரு, அஜீஸ் நகர்,
தண்டையார்பேட்டை, சென்னை–600 081.

(5) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

2/4/26

செயலாளர்.

2/4/26 3/10

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், சென்னை–600 032